# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 9, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தெற்கு பிலிப்பின்ஸில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தின் பாதிப்பில் சிக்கி 35 பேர் உயிரிழந்தனர்; 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

(i) தெற்கு பிலிப்பின்ஸ் பகுதியிலுள்ள மிண்டானோ தீவுக்கு அருகே கடலுக்கு அடியில் 33 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 7.8 அலகுகளாகப் பதிவானது.

(ii) நிலநடுக்கத்தைத் தொடர்ந்து கடலோரப் பகுதிகளில் சுமார் 1 மீட்டர் (3 அடி) உயரத்துக்கு சுனாமி அலைகள் எழுந்ததால் கடலோர கிராமங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின. இந்தோனேசியா, ஜப்பான் ஆகிய அண்டை நாடுகளின் கடலோரப் பகுதிகளிலும் சிறிய அளவிலான சுனாமி அலைகள் பதிவாகின.

(iii) பிலிப்பின்ஸ் அதிபர் ஃபெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மாகாணங்களில் மீட்புப் பணிகளை உடனடியாக முடுக்கிவிட உத்தரவிட்டுள்ளார்.

(iv) நடப்பு ஆண்டில் பிலிப்பின்ஸைத் தாக்கிய மிக சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இதுவாகும். பசிபிக் பெருங்கடலின் 'நெருப்பு வளையம்' எனப்படும் அதிதீவிர நிலநடுக்க மண்டலத்தில் பிலிப்பின்ஸ் அமைந்துள்ளதால், இங்கு அவ்வப்போது நிலநடுக்கங்களும்; எரிமலை வெடிப்புகளும் ஏற்படுவது வழக்கமான ஒன்றாக உள்ளது.

2. ஆர்மீனிய பொதுத் தேர்தலில் தற்போதைய பிரதமர் நிகோல் பாஷின்யன் 49.81 சதவீத வாக்குகளைப் பெற்று, ஆட்சியைத் தக்கவைத்தார். கொசோவோவிலும் ஆளுங்கூட்டணியே வெற்றி பெற்றுள்ளது.

3. கடந்த 2019-க்குப் பிறகு அண்டை நாடான வட கொரியாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள சீன அதிபர் ஷி ஜின்பிங், அந் நாட்டு அதிபர் கிம் ஜோங் உன்னுக்கு சீனா எப்போதும் அசைக்க முடியாத ஆதரவை வழங்கும் என்று உறுதியளித்துள்ளார். வட கொரிய தலைநகர் பியாங்யாங்கில் உள்ள கிம் இல் சுங் சதுக்கத்தில் சீன அதிபர் ஷி ஜின்பிங், அவரின் மனைவிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, இருதரப்பு பேச்சு வார்த்தையில் தலைவர்கள் ஈடுபட்டனர்.

4. 11 வயதில் கார்ட் ரேஸிங்கில் அபாரமாகச் செயல்பட்டு வரும் அட்டிகா மிர், எஃப்1 பந்தயத்துக்குத் தகுதி பெறுவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

5. இத்தாலியில் நடைபெற்ற கிராண்ட் டூர் சைக்கிளிங் போட்டியில் வாகை சூடிய நெதர்லாந்தின் டெமி வோரெங், 3 கிராண்ட் டூர் போட்டிகளிலும் கோப்பை வென்ற 2-ஆவது வீராங்கனையாகப் பெற்றார்.

6. உலகக் கோப்பை கால்பந்து 2026

(i) இம்மாதம் 11-ஆம் தேதி தொடங்கும் இந்த உலகக் கோப்பை போட்டியில் மிக வயதான வீரர், ஸ்காட்லாந்து கோல்கீப்பர் கிரெய்க் கோர்டான் ஆவார். போட்டியின் தொடக்க நாளில் அவரின் வயது 43 ஆண்டுகள், 162 நாள்களாக இருக்கும். இளம் வீரராக மெக்ஸிகோ அணியின் கில்பர்ட் மோரா இருக்கிறார். போட்டி தொடக்க நாளில் அவரின் வயது 17 ஆண்டுகள், 240 நாள்களை எட்டும்.

(ii) கேப் வெர்டெ, கியுராகாவ், ஜோர்டான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 4 அணிகள் முதல்முறையாக உலகக் கோப்பை போட்டிக்குத் தகுதிபெற்று, இந்த ஆண்டு விளையாடவுள்ளன. இத்துடன் உலகக் கோப்பை வரலாற்றில் மொத்தமாக 84 அணிகள் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன.

(iii) போட்டியின் வரலாற்றிலேயே அதிகபட்சமாக, போர்ச்சுகல் நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ 226 ஆட்டங்களில் விளையாடியிருக்கிறார்.

(iv) இந்த ஆண்டு போட்டிக்குத் தகுதிபெற்றிருக்கும் எகிப்து அணி, இதுவரை உலகக் கோப்பை போட்டியின் எந்தவொரு ஆட்டத்திலுமே வென்றதில்லை. 7 ஆட்டங்களில் விளையாடியுள்ள அந்த அணி, 5 டிரா, 2 தோல்விகளைப் பதிவு செய்துள்ளது. போட்டியின் வரலாற்றில் அதிகபட்சமாக 9 ஆட்டங்களில் விளையாடி ஒரு வெற்றியைக் கூட பெறாத அணியாக இருக்கும் ஹோண்டுராஸ், இந்த ஆண்டு போட்டிக்குத் தகுதி பெறவில்லை.

(v) உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளில் ஜெர்மனி வீரர் மிரோஸ்லாவ் கிளோஸ் தனது அணிக்காக மொத்தமாக 16 கோல்கள் அடித்ததே அதிகபட்சமாக உள்ளது. ரொனால்டோ (15), ஜெர்டு முல்லர் (14), மெஸ்ஸி (13), பிரான்ஸின் கிலியன் பாபே (12) ஆகியோர் இந்த சீசனில் அந்த சாதனையை முறியடிப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

(vi) இந்த ஆண்டு உள்பட உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் அனைத்து சீசன்களிலும் விளையாடிய ஒரே அணியாக பிரேஸில் உள்ளது. 1930-இல் உருகுவே போட்டியில் தனது பயணத்தை தொடங்கிய பிரேஸில், போட்டியில் மொத்தமாக 76 வெற்றிகள், 232 கோல்கள் என அனைத்து நிலைகளிலும் முன்னிலையில் உள்ளது.

(vii) இதுவரை நடைபெற்றுள்ள 22 உலகக் கோப்பை போட்டிகளில் மொத்தமாக, 964 ஆட்டங்களில் 2,720 கோல்கள் அடிக்கப்பட்டுள்ளன. 2022 கத்தார் உலகக் கோப்பை போட்டியில் 172 கோல்கள் அடிக்கப்பட்டதே ஒரு சீசனில் அதிகபட்சமாகும். இந்த ஆண்டு போட்டியில் கூடுதல் அணிகள் சேர்க்கப்பட்டுள்ளதால், அந்த சாதனை முறியடிக்கப்படலாம்.

(viii) இந்த ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் மொத்தமாக 1,248 வீரர்கள் அணிகளில் உள்ளனர். இவர்கள், 71 நாடுகளில் உள்ள 449 உள்நாட்டு கிளப்புகளை சேர்ந்தவர்களாவர்.

(ix) உலகக் கோப்பை கால்பந்து போட்டி ஒரே ஆண்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நடைபெறுவது இது 2-ஆவது முறையாகும். 2022-இல் ஜப்பான், தென் கொரியா அவ்வாறு போட்டியை சேர்ந்து நடத்தின. தற்போது அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோவில் நடைபெறுகிறது.

(x) போட்டியின் வரலாற்றில் இதுவரை ஜெர்மனி (1982, 1986, 1990), ஆர்ஜென்டீனா (1994, 1998, 2002) அணிகள் மட்டுமே தொடர்ந்து 3 முறை இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளன. கடந்த இரு சீசன்களில் இறுதிக்கு முன்னேறியிருக்கும் பிரான்ஸ், இந்த ஆண்டும் சாம்பியன்ஷிப்

ஆட்டத்துக்கு வந்து, அந்தப் பட்டியலில் இணையும் முனைப்பில் உள்ளது.

(xi) பிரேஸில் (1958, 1962), இத்தாலி (1934, 1938) ஆகிய இரு அணிகள் மட்டுமே, உலகக் கோப்பை போட்டியில் சாம்பியன் கோப்பையைத் தக்கவைத்தவையாகும்.

7. இந்தியா மீது அமெரிக்க வர்த்தக சட்டம் 1974, பிரிவு 301-இல் கீழ் அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்குப் பிறகே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இறுதியாகும் என மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(i) அமெரிக்க வர்த்தகத்தைப் பாதிக்கும் நியாயமற்ற வெளிநாடுகளின் நடைமுறைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த 301- ஆவது பிரிவு அமெரிக்க வர்த்தக சட்டம் 1974-இல் வடிவமைக்கப்பட்டது.

(ii) இந்நிலையில், கட்டாய உழைப்பைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்வதைத் தடை செய்யத் தவறியதாக குற்றஞ்சாட்டி இந்தியா, சீனா, வங்கதேசம், கம்போடியா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தோனேசியா, ஜப்பான் உள்பட 60 நாடுகளுக்கு எதிராக சட்டப்பிரிவு 301- இன்கீழ் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி (யுஎஸ்டிஆர்) கடந்த மார்ச் மாதம் இரு விசாரணைகளைத் தொடங்கியது.

(iii) இதன் முதல்கட்ட விசாரணை அறிக்கையை கடந்த ஜூன் 2-ஆம் தேதி யுஎஸ்டிஆர சமர்ப்பித்தது. அதில் மேற்கூறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்தியா உள்பட 54 நாடுகள் மீது 12.5 சதவீதம் கூடுதல் வரி விதிக்க அமெரிக்க அரசுக்கு யுஎஸ்டிஆர் பரிந்துரைத்தது. இரண்டாம் கட்ட விசாரணை அறிக்கை விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) ஏனெனில், தற்காலிகமாக இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்கா விதித்துள்ள 10 சதவீத கூடுதல் வரி ஜூலை 24- ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. அதன் பிறகு மிகவும் விருப்பான நாடு (எம்எஃப்என்) என்ற விதியின் கீழ் மட்டுமே தனது வர்த்தக கூட்டுறவு நாடுகளுக்கு அமெரிக்காவால் வரி விதிக்க முடியும்.

(v) இதைச் சுட்டிகாட்டிய மத்திய அரசு அதிகாரி ஒருவர், 'இந்தியா கூடுதலாக வரி செலுத்த வேண்டுமென்றால் வர்த்தகச் சட்டப் பிரிவு 301-இன்கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணையை ஜூலை 24-ஆம் தேதிக்குள் அமெரிக்கா முடிக்க வேண்டும். அதன்பிறகே இந்தியா-அமெரிக்கா இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் இறுதிசெய்யப்படும்' என்றார்.

(vi) முன்னதாக, இந்தியா-அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதிசெய்வது தொடர்பாக கடந்த ஜூன் 2 -ஆம் தேதி முதல் 4-ஆம் தேதி வரை தில்லியில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜேமிசன் கிரீர் தலைமையிலான குழு ஜூலை மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளும் என எதிர்பார்க் கப்படுகிறது.

(vii) இதுகுறித்து கடந்த வாரம் மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் கூறுகையில், இடையேயான 'இந்தியா-அமெரிக்கா இருதரப்பு தற்காலிக ஒப்பந்தம் விரைவில் இறுதியாகும். ஜூலை மாதத்தில் இந்த ஒப்பந்தத்தின் முதல்கட்டம் அமல்படுத்தப்படும்' என்றார்.

8. நிகழாண்டு செப்டம்பருக்குப் பிறகும் நீர்வாழ் உயிரினங்கள், முட்டை, தேன்

உள்ளிட்டவற்றை ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்ய இந்தியாவுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. இதுதொடர்பாக மத்திய வர்த்தக அமைச்சகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) நிகழாண்டு செப்டம்பருக்கு பிறகும் நீர்வாழ் உயிரினங்கள், முட்டை, தேன் உள்ளிட்டவற்றை ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்ய அங்கீகரிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா சேர்க்கப்பட்டுள்ளது. அந்த யூனியனின் திருத்தப்பட்ட ஒழுங்காற்று கட்டமைப்பின் கீழ், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது இந்தியாவின் வேளாண்மை மற்றும் கடல்சார் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

(ii) இதனால் ஐரோப்பிய யூனியன் சந்தையில் அந்தப் பொருள்களை இந்திய ஏற்றுமதியாளர்கள் தொடர்ந்து வெற்றிகரமாக விற்பனை செய்யவும், வர்த்தக வளர்ச்சிக்கும், சம்பந்தப்பட்ட துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் வழி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடவடிக்கை மீன்வளத் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

(iii) ஏனெனில், இந்தியாவில் இருந்து ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் மற்றும் மீன்வளப் பொருள்களின் தற்போதைய மதிப்பு சுமார் 1.59 பில்லியன் டாலராகும் (சுமார் ரூ.15,200 கோடி) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. இந்தியாவின் 100-வது ராம்சார் (Ramsar) தளத்தை அடைந்த முக்கிய மைல்கல் மற்றும் சதுப்புநிலப் பாதுகாப்பில் உள்ள சவால்கள்.

(i) மைல்கல்: இந்தியாவின் 100-வது ராம்சார் தளம்

- உத்தரப் பிரதேசத்தின் பலியா மாவட்டத்தில் உள்ள ஜெய்பிரகாஷ் நாராயண் பறவைகள் சரணாலயம் (சுர்ஹா தால்) அதிகாரப்பூர்வமாக இந்தியாவின் 100-வது ராம்சார் தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- உலக சுற்றுச்சூழல் தினத்தை (ஜூன் 5) ஒட்டி அறிவிக்கப்பட்ட இந்த அங்கீகாரம், அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் பொது விழிப்புணர்வு மூலம் சதுப்புநிலப் பாதுகாப்பில் அரசு மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாகும்.
- உலகளவில், இந்தச் சரணாலயம் 2,595-வது ராம்சார் தளமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

(ii) இந்தியாவின் உலகளாவிய மற்றும் பிராந்திய நிலை

- ஆசியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான ராம்சார் தளங்களைக் கொண்ட நாடாக இந்தியா தற்போது திகழ்கிறது.
- உலக அளவில், கிரேட் பிரிட்டன் (176 தளங்கள்) மற்றும் மெக்சிகோ (144 தளங்கள்) ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது.
- சதுப்புநிலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் வேகமாக அதிகரித்துள்ளன; கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள தளங்களின் எண்ணிக்கை 26-லிருந்து 100-ஆக உயர்ந்துள்ளது, இதில் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 58 தளங்கள் அங்கீகாரம் பெற்றுள்ளன.

(iii) தமிழ்நாட்டின் முக்கிய பங்கு

- நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலும், 20 ராம்சார் தளங்களுடன் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- இப்பட்டியலில் தமிழ்நாட்டிலிருந்து புதிதாகச் சேர்க்கப்பட்டவற்றில் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சக்கரக்கோட்டை மற்றும் தீர்த்தங்கல் பறவைகள் சரணாலயங்கள் அடங்கும்.
- மாநிலத்தின் முதல் ராம்சார் தளமாக 2002-ல் அங்கீகரிக்கப்பட்ட 'பாயிண்ட் கேலிமர்' (கோடியக்கரை) திகழ்கிறது.

(iv) சூழலியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம்

- சதுப்புநிலங்கள் நீரை வடிகட்டிச் சுத்திகரிப்பதால், அவை "பூமியின் சிறுநீரகங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.
- ஜெய்பிரகாஷ் நாராயண் பறவைகள் சரணாலயம், 'மத்திய ஆசியப் பறவை வலசைப் பாதையில்' (Central Asian Flyway) பயணிக்கும் பறவைகளுக்கு ஒரு முக்கிய குளிர்காலத் தங்குமிடமாகத் திகழ்கிறது; மேலும் நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர் மறுஊட்டத்தின் மூலம் உள்ளூர் விவசாயத்திற்கு ஆதரவளிக்கிறது.
- எல் நினோ (El Niño) போன்ற காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதிலும், கார்பனை உறிஞ்சுவதிலும், காற்று மாசுபாட்டைக் குறைப்பதிலும் சதுப்புநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

(v) சதுப்புநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான அச்சுறுத்தல்கள்

- சர்வதேச அங்கீகாரம் பெற்றிருந்தாலும், உலகின் மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளான சூழல் மண்டலங்களாகச் சதுப்புநிலங்கள் உள்ளன.
- 1970-ஆம் ஆண்டு முதல், உலகளவில் சுமார் 40 கோடி ஹெக்டேர் பரப்பளவிலான சதுப்புநிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன.
- ஆக்கிரமிப்புகள், நீர்வரத்தில் வீட்டு மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் சட்டவிரோதமாகக் கலத்தல் மற்றும் முறையான பாதுகாப்புத் திட்டமிடல் இல்லாமை ஆகியவை முக்கிய அச்சுறுத்தல்களாக உள்ளன.

(vi) முடிவுரை: பாதுகாப்பின் அவசியம்

- பல்லுயிர் பெருக்கத்தைப் பேணுவதற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் சதுப்புநிலங்கள் இன்றியமையாதவை.
- இச்சதுப்புநிலங்கள் அழிக்கப்பட்டால், அது மனித உயிர்வாழ்வுக்கே ஆபத்தை விளைவிக்கும்; எனவே, இவற்றைப் பாதுகாப்பது ஒரு அடிப்படைத் தேவையாகும்.

10. இந்தியா மற்றும் உலக அளவில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சித் தரங்களின் தற்போதைய நிலை குறித்த பகுப்பாய்வு.

(i) பல்கலைக்கழகங்களின் பங்கு

- ஒரு நாட்டின் சமூக முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் அறிவுசார் வளர்ச்சி மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகளின் மையங்களாகப் பல்கலைக்கழகங்கள் பாரம்பரியமாகப் பார்க்கப்படுகின்றன.
- இருப்பினும், முனைவர் பட்டங்களை (PhD) வழங்குவதில் சமீபகாலமாக ஏற்பட்டுள்ள கட்டுப்பாடற்ற விரிவாக்கம், இக்கல்வி நிறுவனங்களின் அடிப்படை நோக்கத்தையே

சிதைக்கும் வகையில் அமைந்துள்ளது.

(ii) முனைவர் பட்டங்கள் (PhD) தொடர்பான உலகளாவிய மற்றும் தேசியப் போக்குகள்

- கடந்த இரு தசாப்தங்களில் உலகளவில் முனைவர் பட்டம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.
- OECD-இன் தரவுகளின்படி, அதன் உறுப்பு நாடுகள் ஆண்டுதோறும் 3,00,000-க்கும் மேற்பட்ட முனைவர் பட்டங்களை வழங்குகின்றன.
- அமெரிக்கா ஆண்டுக்கு 55,000-க்கும் மேற்பட்ட முனைவர் பட்டங்களையும், சீனா 70,000-க்கும் மேற்பட்ட பட்டங்களையும் வழங்குகின்றன.
- இந்தியாவில், 2010 மற்றும் 2020-க்கு இடைப்பட்ட காலத்தில் முனைவர் பட்டம் பெறுவோரின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளது; தற்போது ஆண்டுதோறும் 40,000-க்கும் மேற்பட்ட முனைவர் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

(iii) ஆராய்ச்சித் தரத்தில் சரிவு

- முனைவர் பட்டங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள விரைவான அதிகரிப்பு, ஆராய்ச்சித் தரத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறது.
- தனியார் கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் முனைவர் பட்டப் படிப்புகளை வருவாய் ஈட்டும் முக்கிய வழியாகக் கருதுகின்றன; இதனால் தரநிலைகள் தளர்த்தப்படுவதோடு, தேவையான ஆராய்ச்சித் திறன் இல்லாத மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

(iv) ஆராய்ச்சியில் ஊழல் மற்றும் முறைகேடுகள்

- ஆராய்ச்சியாளர்களுக்கும் (ஆராய்ச்சி மாணவர்கள்) அவர்களுக்கு வழிகாட்டுபவர்களுக்கும் (guides) இடையிலான உறவு நிதி சார்ந்த காரணிகளால் அதிகம் பாதிக்கப்படுகிறது.
- வழிகாட்டியைத் தேர்ந்தெடுப்பது, ஆராய்ச்சியின் முன்னேற்றத்தை எளிதாக்குவது அல்லது பட்டப் படிப்பை விரைவாக முடிப்பது போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக ₹50,000 முதல் ₹10,00,000 வரையிலான லஞ்சப் பணம் கைமாறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- கட்டாய ஆய்வுக் கட்டுரை வெளியீட்டு விதிமுறைகள் காரணமாக, கட்டணம் பெற்றுக்கொண்டு கட்டுரைகளை வெளியிடும் 'சுரண்டல் மனப்பான்மை கொண்ட இதழ்கள்' (predatory journals) பெருகியுள்ளன.
- முறையான சக மதிப்பாய்வு (peer-review) நடைமுறைகளைப் பின்பற்றாத இத்தகைய இதழ்களில் கட்டுரைகளை வெளியிட ஆராய்ச்சியாளர்கள் பெரும்பாலும் ₹5,000 முதல் ₹1,00,000 வரை பணம் செலுத்துகின்றனர்.
- இத்தகைய நம்பகத்தன்மையற்ற இதழ்களில் வெளியாகும் கட்டுரைகளில் 25% முதல் 30% வரையிலானவை இந்திய முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்களால் எழுதப்பட்டவை என்று தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

(v) மேற்பார்வையில் உள்ள சவால்கள் மற்றும் நிறுவனச் சார்புநிலை

- ஒரு மாணவரின் முன்னேற்றம் அவரது திறமையைச் சார்ந்திருக்காமல் நிதி வசதியைச் சார்ந்திருக்கும்போது, மேற்பார்வை தொடர்பான அறநெறித்

தரநிலைகள் பலவீனமடைகின்றன.

- சில நிறுவனங்களில், ஒரு மேற்பார்வையாளர் 10 முதல் 15 மாணவர்களைக் கண்காணிக்க வேண்டியிருப்பதால், ஒவ்வொரு மாணவர் மீதும் போதுமான தனிப்பட்ட கவனத்தைச் செலுத்த முடிவதில்லை.
- பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் மேற்பார்வையாளரின் தனிப்பட்ட திறனை விட நிறுவனத்தின் அந்தஸ்துக்கே முன்னுரிமை அளிக்கின்றன; இதனால் சுயநிதிப் கல்லூரிகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த பேராசிரியர்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

(vi) விரைவாக முடிப்பதற்கான அழுத்தம்

- பல ஆய்வாளர்கள் தங்கள் முனைவர் பட்டப் (PhD) படிப்பை மூன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டிய அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள்.
- இதன் விளைவாக, ஆழமான மற்றும் அர்த்தமுள்ள ஆய்வுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் பெரும்பாலும் எளிதான ஆய்வுத் தலைப்புகளையே தேர்ந்தெடுக்கிறார்கள்; இது தேக்கநிலைக்கும், உண்மையான புதிய கண்டுபிடிப்புகள் இல்லாமைக்கும் வழிவகுக்கிறது.

(vii) அமைப்புரீதியான விளைவுகள் மற்றும் சீர்திருத்தத்தின் அவசியம்

- தரம் குறைந்த முனைவர் பட்டம் பெற்றவர்கள் கற்பித்தல் பணிக்கு வரும்போது, அவர்கள் அடுத்த தலைமுறை மாணவர்களுக்கும் அதே குறைவான தரநிலைகளைக் கொண்ட சூழலையே தொடரச் செய்கிறார்கள்.
- தரம், நேர்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கும் உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகளின் மூலமே ஆராய்ச்சி சார்ந்த கல்வியை மீண்டும் வலுப்படுத்த முடியும்.